MAALAI MALAR

12 DEC 2022

PAGE 4

# முதுகலை பாடப்பிரிவில் காலியிடங்கள் அறிவிப்பு

புதுச்சேரி, டிச.12—

புதுவை பல்கலைக்கழக துணை பதிவாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:—

புதுவை பல்கலைக்கழகத்தில் 2022—23—ம் கல்வியாண்டு கியூட் தேர்வில் தகுதி பெற்று முதுகலை, முதுகலை டிப்ளமோ படிப்புக்கான மாணவர் சேர்க்கை கலந்தாய்வு முடிக்கப்பட்டுள்ளது.

இதில் பல இடங்கள் காலியாக உள்ளது.

இது குறித்து இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தரவரிசைப்படி நேரடி கலந்தாய்வு மூலம் இடங்கள் நிரப்பப்பட உள்ளது. அந்தந்த துறைகளில் வருகிற 16—ந் தேதி மாணவர்கள்நேரடியாக கலந்துகொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

"DINAMALAR"

PAGE NO: 04

DATE: 12.12.2022

# முதுகலை பாடப்பிரிவில் காலி இடங்கள் அறிவிப்பு

**புதுச்சேரி, டிச. 12–**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் முதுகலை மற்றும் முதுகலை டிப்ளமோ பாடப்பிரிவில் காலியாக உள்ள இடங்கள் இணையதளத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக துணை பதிவாளர் செய்தி குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் 2022 – 2023ம் கல்வியாண்டு கியூட் தேர்வில் தகுதிப்பெற்று முதுகலை மற்றும் முதுகலை டிப்ளமோ படிப்புக்கான மாணவர் சேர்க்கை கலந்தாய்வு நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

முதுகலை மற்றும் முதுகலை டிப்ளமோ பாடப்பிரிவில் பல இடங்கள் காலியாக உள்ளன. ஒவ்வொரு துறையிலும், காலியாக உள்ள இடங்கள் குறித்த விபரம் பல்கலைக்கழக இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தரவரிசை பட்டியல் அடிப்படையில் அந்தந்த துறையில் நேரடி கலந்தாய்வு மூலம் காலி இடங்களை நிரப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, அந்தந்த துறையில் வரும் 16ம் தேதி காலை 11:00 மணியளவில் நேரடி கலந்தாய்வு நடக்கிறது.

கியூட் தேர்வில், தேர்ச்சி பெற்ற மாணவர்கள் கலந்தாய்வுக்கு வரும்போது அனைத்து அசல் சான்றிதழ்கள் மற்றும் நகல்களை கொண்டு வரவேண்டும். சீட் கிடைத்த மாணவர்கள் உடனே இணையதளம் மூலம் கட்டண தொகை செலுத்த வேண்டும்.